**SO – 19A**

# DEPARTMENTAL EXAMINATION
**May 2019**

## DEPARTMENTAL ACCOUNTS TEST FOR SUBORDINATE OFFICERS
**(With Books)**

*Time: Three hours* | *Maximum Marks: 100*
*நேரம் :3 மணி* | *அதிகபட்ச மதிப்பெண்கள் : 100*

| *Note/ குறிப்பு :* | | |
|---|---|---|
| (1) | *Answer five questions only. First question is compulsory. Answer any 4 out of the remaining 7 questions.* | *ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். முதல் கேள்விக்கு கட்டாயமாக விடையளிக்கவும், மீதமுள்ள ஏழு கேள்விகளில் நான்கிற்கு மட்டும் விடையளிக்கவும்,* |
| (2) | *Candidates are allowed the option to answer the paper either in English or in Tamil.* | *தேர்வாளர்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ விடையளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.* |
| (3) | *When answering in excess of prescribed number of 5 questions, the excess answers will not be valued.* | *ஐந்து வினாக்களுக்கு மேல் மிகையாக விடை எழுதும் பட்சத்தில் அந்த மிகையான பதில்களுக்கு மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.* |
| (4) | *Answer should be brief and to the point and need not be a verbatim reproduction of printed pages.* | *விடைகள் சுருக்கமாகவும் கேள்விக்கு உரியதாகவும் இருத்தல் அவசியம். பதில்கள் அச்சிடப்பட்ட பக்கங்களின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டாம்.* |
| (5) | *Hand writing should be legible.* | *கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும்.* |

Marks

1. Choose the correct answer: 1*20=20
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:
   i. How many years an employee/official has to put their service in the same post so as to eligible for selection grade?
   a. 9 years b. 20 years c.18 years
   தேர்வு நிலை ஊதிய உயர்வு அனுமதியளிக்க ஒரு ஊழியர் ஒரே பதவியில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்?
   a. 9 வருடம் b. 20 வருடம் c. 18 வருடம்
   ii. What is the minimum time interval between two part final withdrawals in General Provident Fund (GPF)?
   a. 6 months b.2 years c.1 year
   பொது வருங்கால வைப்பு நிதியில் இருந்து இரண்டு முறை பகுதி இறுதியாக பெறுவதற்கான குறைந்தபட்ச கால இடைவெளி எவ்வளவு?
   a. 6 மாதம் b. 2 வருடம் c. 1 வருடம்
   iii. The retirement age of a last grade servant is
   a. 58 years b. 60 years c. 62 years
   கடை நிலை ஊழியர் ஒருவரின் ஓய்வு பெறும் வயது?
   a. 58 வருடங்கள் b. 60 வருடங்கள் c. 62 வருடங்கள்
   iv. Who is the appellate for the punishment awarded by the Executive Engineer?
   a. SE b. CE c. Chairman

செயற்பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கான இறுதி தீர்ப்பின் மீது மேல் முறையீட்டு மனு தாக்கல் எந்த அலுவலரிடம் செய்யலாம்?

a. மேற்பார்வை பொறியாளர் b. தலைமை பொறியாளர் c. இயக்குநர்

v. The authority who is empowered to approve the period of suspension beyond 90 days for an officer in class II service?

a. CE b. Chairman c. SE

பணித்தொகுதி இரண்டாம் நிலை அலுவலர் 90 நாட்களுக்கு மேல் பணியிடை நீக்கம் தொடர்வதாக இருந்தால், எந்த அலுவலரின் முன் அனுமதி பெற வேண்டும்?

a. தலைமைப் பொறியாளர் b.இயக்குனர் c. மேற்பார்வை பொறியாளர்

vi. Whether hill allowance can be included for the purpose of enhancement of earned leave?

a. Yes b. No c. 50%

ஈட்டிய விடுப்பை காசாக்கி கொள்வதற்கு மலைவாழ் படியை கணக்கில் எடுத்துக் கொள்ளலாமா?

a. ஆம் b. இல்லை c. 50 சதவீ தம் மட்டும்

vii. How many days an employee /officer is entitled to encashment his /her earned leave at the time of retirement?

a. 180 days b.240 days c. 360 days

ஒரு ஊழியர்/அலுவலர் ஓய்வு பெறும் போது அதிகபட்சமாக எத்தனை நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்புவிப்பு செய்து காசாக்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது?

a. 180 நாட்கள் b. 240 நாட்கள் c. 360 நாட்கள்

viii. The authority who is empowered to sanction the final Surrender Leave Sanction (SLS) in case of Class I Officers at the time of retirement?

a. SE b. CE c. Secretary

பணித்தொகுதி I ஐ சார்ந்த ஓர் அலுவலர் பணி ஓய்வு பெறும் பொழுது பணியாளருக்கு ஈட்டிய விடுப்பை ஒப்புவித்து காசாக்கி கொள்வதற்கு அனுமதி அளிப்பதற்கான அங்கீகாரம் பெற்ற அலுவலர் யார்?

a. மேற்பார்வை பொறியாளர் b. தலைமைப் பொறியாளர் c. செயலாளர்

ix. Who is the competent authority of sanctioning to acquire an immovable property in the level of Assistant Engineer?

a. SE b. CE c. EE

உதவி மின் பொறியாளர் அசையா சொத்து வாங்குவதற்கு எந்த அலுவலரிடம் முன் அனுமதி பெற வேண்டும்?

a. மேற்பார்வை பொறியாளர் b. தலைமைப் பொறியாளர் c. செயற்பொறியாளர்

x. Based on a delinquent's request, in normal situation, how many times the enquiry has to be postponed?

a. 2 b. 3 c. 1

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் சாதாரண நிலையில், விசாரணையை தள்ளி வைக்க கோரினால் அதிகபட்சம் எத்தனை முறை அனுமதிக்கலாம்?

a. 2 b. 3 c. 1

xi. Under HBA rules, which of the following rate of recovery shall to be made to an employee's who has more than 20 years of service?

a. 50% pay+ DA b. 40% pay+ DA c. 60% pay+ DA

20 ஆண்டுகளுக்கு மேலாக பணிக்காலம் உள்ள வாரிய ஊழியருக்கு எவ்வளவு சதவீதம் வீடு கட்ட முன்பணம் பிரதி மாதம் பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

a. 50% pay+ DA b. 40% pay+ DA c. 60% pay+ DA

xii. What percentage of pension to be sanctioned for an employee at the time of retirement?

a. 50% b. 30% c. 60%

ஓய்வு பெறும் பணியாளருக்கு எத்தனை சதவீதம் ஓய்வூதியம் வழங்கப்படும்?

a. 50% சதவீதம் b. 30% சதவீதம் c. 60% சதவீதம்

xiii. How many installments can be granted to an employee to reply the HBA sanctioned amount along with interest?

a. 240 months b. 60 months c. 100 months

வீடு கட்ட முன்பணம் வட்டியுடன் சேர்த்து மொத்தம் எத்தனை தவணைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

a. 240 மாதம் b. 60 மாதம் c. 100 மாதம்

xiv. Under present HBA rules, the maximum amount of HBA to be allowed to an employee is ------------.

a. 40 lakhs b. 18 lakhs c. 25 lakhs

தற்போது வீட்டு கடன் முன்பணம் அதிகபட்சமாக எவ்வளவு தொகை அனுமதிக்கபடுகிறது.

a. 40 இலட்சம் b. 18 இலட்சம் c. 25 இலட்சம்

xv. If an employee travels 420 Km in train to reach his new headquarters, the joining time may be how many days?

a. 2 days b. 1 days c. 3 days

420 கி.மீ இரயிலில் பயணம் செய்தால் ஒருவருக்கு பணியிடைக் காலம் எத்தனை நாள் அனுமதிக்கலாம்?

a. 2 நாட்கள் b. 1 நாள் c. 3 நாட்கள்

xvi. What percentage of subsistence allowance eligible to an employee who is under suspension upto 3 months?

a. 75% b. 100% c. 50%

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியருக்கு 3 மாத காலத்திற்கு வழங்கப்படும் பிழைப்பூதியத்தின் அளவு?

a. 75 சதவீதம் b. 100 சதவீதம் c. 50 சதவீதம்

xvii New Health Insurance Scheme 2016 (NHIS) has been implemented on

a. 01.07.2016 b. 01.07.2017 c. 01.01.2016

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்- 2016 எந்த நாளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?

a. 01.07.2016 b. 01.07.2017 c. 01.01.2016

xvii i. How much amount has been deducted from an employee against New Health Insurance Scheme?

a. Rs.360 b. Rs.180 c. Rs.100

புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் படி வாரிய பணியாளரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டும்?

a. Rs.360 b. Rs.180 c. Rs.100

xix. How many years an employee has to be served who wishes to apply for voluntary retirement?

a. 15 years b. 20 years c. 25 years

விருப்ப ஓய்வு பெற ஒரு பணியாளர் எத்தனை ஆண்டு காலம் பணி புரிந்திருக்க வேண்டும்?

a. 15 வருடம் b. 20 வருடம் c. 25 வருடம்

xx. How many days of casual leave can be sanctioned continuously to an employee (including holidays) at one time?

a. 5 days b. 10 days c. 15 days

ஒரு பணியாளர் தொடர்ச்சியாக விடுமுறை நாட்களையும் சேர்த்து ஒரு தடவை எத்தனை நாள் தற்செயல் விடுப்பு எடுக்க அனுமதிக்கலாம்?

a. 5 நாள் b. 10 நாள் c. 15 நாள்

2. Fill in the Blanks: 1*20=20

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

i. The Contribution Pension Scheme (CPS) has been implemented in TANGEDCO on ---------------------.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட நாள்-----------

ii. Abbreviation : UEL on PA ----------------------

விரிவாக்கம் தருக : UEL on PA ----------------------

iii. One casual leave shall be deducted for ------------------- late attendance without obtaining prior permission.

முன் அனுமதியின்றி எடுக்கப்படும் ----------- காலதாமத வருகைக்கு ஒரு நாள் தற்செயல் விடுப்பு கழிக்கப்பட வேண்டும்.

iv. ---------------days of unearned leave on MC can be availed by an employee in his/her total service.

ஒருவர் தம் மொத்த பணிக்காலத்தில் -------- நாட்கள் ஈட்டா மருத்துவ விடுப்பு எடுக்கலாம்.

v. --------------days can be availed as CL by an employee, who is going to be retired on 30.04.2019 AN.

30.04.2019 பிற்பகல் ஓய்வு பெறும் ஒரு ஊழியர் -------- நாட்கள் தற்செயல் விடுப்பு எடுக்கலாம்.

vi. Shall TA bill be allowed to an employee if he/she performs journey within a radius of 8 Km?
8 கி.மீ தொலைவிற்கு குறைவாக பயணம் செய்யும் ஒருவருக்கு பயணப்படி அனுமதிக்கலாம்?

vii. If an employee/Officer wishes to avail leave on private affairs combined with earned leave at one time, then maximum --------------- days he/she can avail?
ஒரு ஊழியர்/அலுவலர் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு மற்றும் ஈட்டிய விடுப்பு இரண்டும் சேர்த்து ஒரு தடவை ---------- நாட்களுக்கு மிகாமல் எடுக்கலாம்.

viii. ----------------- Class by train is eligible for Class III & IV employees during official trip to draw TA bill.
பணித்தொகுதி 3 மற்றும் 4 ல் உள்ள பணியாளர்கள் அலுவலக ரீதியான பயணத்தின் போது இரயிலில் ---------- வகுப்பில் பயணம் செய்வதற்கு பயணப்படி அனுமதிக்கலாம்?

ix. ------------------ is the percentage of annual increment of an Employee /Officer.
ஒரு வாரிய ஊழியருக்கு/அலுவலருக்கு ஆண்டுயர்வு ---------- சதவீதம் வழங்கப்பட வேண்டும்.

x. As per the revised wage revision, revised HRA&CCA can be sanctioned to an employee/ Officer with effect from ------------------.
நடப்பில் உள்ள ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் படி, வீட்டு வாடகைப் படி மற்றும் நகரப் படி ---------- தேதியில் இருந்து ஒரு ஊழியருக்கு/அலுவலருக்கு வழங்கப்பட வேண்டும்.

xi. Whether HBA may be sanctioned to an employee where a disciplinary proceeding against him is pending?
ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையில் இருக்கும் ஒரு பணியாளருக்கு வீடு கட்ட முன்பணம் அனுமதிக்கலாமா?

xii. If an employee / Officer wishes to surrender his earn leave once in two years ---------------- days are maximum eligible.
ஒரு வாரிய பணியாளர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஈட்டிய விடுப்பை ஒப்பளிப்பு செய்து காசாக்கி கொள்ள விரும்பினால் அதிகபட்சமாக ---------- நாட்களை ஒப்படைப்பு செய்யலாம்.

xiii. During probation period of an employee, to earn a single day of EL -------------days he/she should have been worked.
தகுதிகாண் பருவத்தில் பணிபுரியும் ஒரு பணியாளருக்கு -------- நாள் பணிபுரிந்தால் ஒரு நாள் ஈட்டிய விடுப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

xiv. Enhanced pension may be permitted up to the age of ----------------
அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் அனுமதிக்கப்படும் வயது ----------.

xv. Maximum -------------- days can be sanctioned as compensation leave to an employee in a year.

ஈடு கட்டும் விடுப்பு ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக -------------- நாட்கள் அனுமதிக்கலாம்.

xvi. Travelling allowance bills should be submitted within -------------- months, if tour advance claimed.
பயண முன்பணம் பெற்ற பணியாளர் பயணப்படி பெறுவதற்கான பட்டியலை ----------------- மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

xvii. Whether the provincial official who works on national holidays is entitled to claim double wages?
தேசிய விடுமுறை நாட்களில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் இரட்டிப்பு ஊதியம் பெறத் தகுதியுடையவரா?

xviii. Study leave can be permitted up to ---------------- months during his entire service.
ஒருவருடைய பணிக்காலத்தில் கல்வி விடுப்பு மொத்தம் ---------- மாதங்கள் அனுமதிக்கலாம்.

xix. Whether TA will be admissible in respect to journey of an employee from the last working station to settle down his home town on superannuation?
வாரிய பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர் தனது சொந்த ஊருக்கு சென்று நிரந்தரமாக தங்குவதாக இருந்தால் அதற்கு பயணப்படி வழங்கலாமா?

xx. Study leave can be sanctioned to an Officer who rendered ----------- year service under the Board.
படிப்பு கால விடுப்பு ஒரு அலுவலருக்கு வழங்க -------------- வருடம் அவர் பணியாற்றிருக்க வேண்டும்.

3. Write short notes on: 20 *1=20
1.Eligibility criteria for purchase of Ready Built House, Grace period and mode of recovery details.
சிறு குறிப்பு வரைக:
1. புதிய வீ டு வாங்குவதற்கான வீ டு கட்டும் முன் பணம் பெறுவது குறித்த தகுதி காண் காரணிகள், அனுமதிக்கப்படும் காலம், பணப்பிடித்தம் செய்வதற்கான வழிமுறைகள் பற்றி விரிவான குறிப்பு வரைக.

4. Write short notes on: 10*2=20
1.Special Disability Leave
2.Ex-Ordinary Leave & Study Leave
சிறு குறிப்பு வரைக:
1. சிறப்பு இயலாமை விடுப்பு
2. ஊதியமில்லா மிகை விடுப்பு மற்றும் கல்வி விடுப்பு

5. Find out the credit of Leave Account of an Officer up to 31.12.2016 with the following particulars:

| | | |
|---|---|---|
| 1. | The EL at his credit as on 31.12.2010 | = 148 days |
| 2. | The UEL on MC at his credit as on 31.12.2010 | = 305 days |
| 3. | His surrender of earn leave is 30 days for every two years &las claimed on 01.09.2010 | |

4. The officer has availed EL from 01.04.2011 to 30.04.2011
5. Availed UEL on MC for 45 days from 02.07.2013
6. Availed EL from 01.10.2014 to 15.10.2014
7. Availed MC from 15 days from 07.03.2015

Calculate the Leave of EL & MC at his credit as on 31.12.2016.

கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு 31.12.2016 ம் தேதி வரை பணியாளரது பல்வேறு வகை விடுப்புகளை கணக்கிடுக.

| | | |
|---|---|---|
| 1. | ஈட்டிய விடுப்பு 31.12.2010 ல் | = 148 days |
| 2. | மருத்துவ சான்றுடன் கூடிய ஈட்டா விடுப்பு 31.12.2010 ல் | = 305 days |
| 3. | இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்புவித்து காசாக்கி கொள்வார். கடைசியாக காசாக்கி கொண்ட நாள் 01.09.2010. | |
| 4. | ஈட்டிய விடுப்பினை 01.04.2011 முதல் 30.04.2011 எடுத்துள்ளார். | |
| 5. | 02.07.2013 முதல் 45 நாட்களுக்கு மருத்துவ சான்றிதழுடன் கூடிய ஈட்டா விடுப்பு எடுத்துள்ளார். | |
| 6. | ஈட்டிய விடுப்பினை 01.10.2014 முதல் 15.10.2014 எடுத்துள்ளார். | |
| 7. | 07.03.2015 முதல் 15 நாட்களுக்கு மருத்துவ விடுப்பு எடுத்துள்ளார். | |

பணியாளரது கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பினை 31.12.2016 அன்று கணக்கிடுக.

6. The pay of an officer in pay band 4 as on 01.02.2017 is 88600.He has been promoted to higher post in pay band 5 on 21.08.2017.His regular increment date is 01.10.2017.The officer opted for promotion pay fixation in the date of accrual of regular increment.

1. Fix the initial pay fixation as per the above option
2. Fix the promotion pay fixation as per option.

| Pay band 4 | Pay Band 5 |
|---|---|
| 86000 | 88900 |
| 88600 | 91600 |
| 91300 | 94300 |
| 94000 | 97100 |
| 96800 | 100000 |

ஓர் அலுவலரது ஊதியம் ஊதிய வரிசை எண் 4 ன் படி 01.02.2017 அன்று ரூ.88600 மேற்படி அலுவலர் பதவி உயர்வு பெற்றதின் காரணமாக, அன்னாரது ஊதியம் 21.08.2017 அன்று ஊதிய வரிசை 5 ல் நிர்ணயம் செய்யப்படுகிறது.பணியாளரது ஆண்டு உயர்வு தேதி 01.10.2017. பணியாளர் ஆண்டு உயர்வில் பதவி உயர்வுக்கான ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்யுமாறு விருப்பம் தெரிவித்துள்ளார்.

1. பணியாளரது விருப்பத்தின் படி தற்காலிகமாக வழங்கப்பட

வேண்டிய ஊதியத்தினை நிர்ணயம் செய்க.

2. பணியாளரது விருப்பத்தின் படி ஆண்டு உயர்வில் மறு நிர்ணயம் செய்க.

| ஊதிய வரிசை 4 | ஊதிய வரிசை 5 |
|---|---|
| 86000 | 88900 |
| 88600 | 91600 |
| 91300 | 94300 |
| 94000 | 97100 |
| 96800 | 100000 |

7. The details of an Officer who retires as on 31.12.2018 is furnished below: 20*1= 20

| | |
|---|---|
| Date of Birth | 22.12.1960 |
| Date of joining in board's service | 28.08.1988 |
| Date of retirement | 31.12.2018 |
| His next increment date | 01.01.2019 |
| Last pay drawn in pay band 5 | 160600/- |
| The next pay levels are | 165400/- |
| | 170400/- |
| | 175500/- |
| The Applicable Dearness Allowance | 9 percentages |

Find his Pension, DCRG, Net Qualifying Service, Family pension & Commuted value of pension.

31.12.2018 அன்று பணி ஓய்வு பெறும் அலுவலரின் விவரங்கள்:

| | |
|---|---|
| பிறந்த தேதி | 22.12.1960 |
| வாரியத்தில் பணியில் சேர்ந்த தேதி | 28.08.1988 |
| பணி ஓய்வு பெறும் தேதி | 31.12.2018 |
| ஆண்டு உயர்வு வழங்கப்படும் தேதி | 01.01.2019 |
| கடைசியாக பெற்ற ஊதியம்(வரிசை 5) | 160600/- |
| தொடர்ச்சியான ஊதிய வரிசை | 165400/- |
| | 170400/- |
| | 175500/- |
| பஞ்சப்படி அன்றைய தேதியில் | 9 சதவீ தம் |

பணியாளரது நிகர பணிக்காலம், ஓய்வூதியம், ஓய்வு பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத்தை தொகுத்து பெறல் போன்றவற்றைக் கணக்கிடவும்.

8. Write in detail for the following: 10*2 =20

   a. Appeal on Penalty
   b. Memorial (Mercy Petition)

பெரு குறிப்பு வரைக:

1. தண்டனை மீதான மேல் முறையீடு
2. கருணை மனு

*******